**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண்.81/2023**

**வாதி தரப்பு 2 வது சாட்சி மும்மையா என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**நாள்: 24.03.2026**

**வா.சா.2**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் புதுப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர். வாதி வைத்தியநாதன் விராலிமலையை சேர்ந்தவர் என்றால் சரிதான். விராலிமலையிலிருந்து புதுப்பட்டி 3 1/2 கிமீ தூரத்தில் உள்ளது.

2. எனக்கு வயது 84 என்பதால் தற்போது அடிக்கடி விராலிமலை சென்று வருவதற்கு எனக்கு அவசியம் ஏற்படாது என்றால் சரியல்ல. வாதி வைத்தியநாதன் எனக்கு உறவினரா என்றால் இல்லை. வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவரது அப்பா மூலம் பழக்கம்.

3. எப்போது கடை வைத்திருந்தேன் என்றால் 1965 இல் கடை வைத்திருந்தேன். யாருக்கு எதிராக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, வழக்கு கோப்பை படித்து தெரிந்து கொண்டேன்.

4. எனது நிரூபண வாக்குமூலத்திற்கு வாதி தான் விவரம் சொன்னார் என்றால் அவரது அப்பாவும் விவரம் சொன்னார். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 1 அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5. தாவா சொத்தின் சர்வே எண் 45/5D, விஸ்தீரணம் 5 செண்ட் ஆகும். அந்த சொத்து வாதிக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவரது அப்பா தானமாக எழுதி வைத்துள்ளார். அவரது அப்பாவிற்கு எவ்வாறு அந்த சொத்து பாத்தியம் என்றால் ராமையா மனைவி சௌந்திரம்மாளிடம் கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை.

6. தாவா சொத்தின் நான்கெல்லை இரண்டு பக்கம் தெரியும், இரண்டு பக்கம் தெரியாது. சர்வே எண் 45/5D க்கு தென்புறம் கிழமேல் ரோடு உள்ளது என்றால் கிரையம் வாங்கிய சமயத்தில் ரோடு இல்லை, தற்போது தான் ரோடு உள்ளது. தென்புறம் உள்ள ரோடு 50 வருடங்களாக உள்ளது என்றால் இல்லை, முன்பு இனாம்குளத்தூர் ரோடு இருந்தது. அந்த ரோடு வழியாக தான் இனாம் குளத்தூர் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த ரோட்டின் வழியாக தான் பொதுமக்கள் இனாம்குளத்தூருக்கு சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பு மண்ரோடாக இருந்தது என்றால் இல்லை, தார் ரோடாக இருந்தது.

7. தாவா சொத்திற்கு அருகில் சாக்கடை அமைத்துள்ள விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாக்கடை அமைத்தபிறகு நான் பார்க்கவில்லை. வழக்கு விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் வழக்கில் தரப்பினர் இல்லை என்பதால் பரிகாரம் கேட்க முடியாது என்றும், நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**அனுமதியின் பேரில் மறுவிசாரணை**

1. இனாம் குளத்தூர் ரோடு தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் தாவா சொத்தின் அத்தே இனாம் குளத்தூர் ரோடு தான். தாவா சொத்திற்கு கீழ்புறம் தெற்கிலிருந்து கிராசாக செல்கிறது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**